# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC 129/2020 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW6/PW- 6 | Village: |
| Name :, மருத்துவர் சுமித்ரா | Age :44 |
| | Taluk : |
| Father's/Husband's Name : | |
| | Religion : |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 19.02.2024.**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி.அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

நான் தற்போது சென்னை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை மருத்துவ படிப்பு பயின்று வருகிறேன். கடந்த 06.09.2020 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் இரவு 9.10 மணியளவில் நரசிங்கன்பேட்டை கன்னியம்மன் கோவில் தெருவை சேர்ந்த செந்தில மனைவி உமா என்பவரை அவரது சம்பந்தி மேரிஸ்டெல்லா என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்திருந்தார். நான் அவரை விசாரித்தபோது அன்றை தினம் மாலை 7 மணியளவில் அவரது வீட்டின் வாசலில் அடையாளம் தெரிந்த நபர் அவரை கட்டையால்

தாக்கியதால் தானே தன்மேல் மண்ணெண்ணையை ஊற்றி கொண்டதாக கூறினார். நான் அவரை பரிசோததித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். நாடித்துடிப்பு சீராக இருந்தது. அவருக்கு வெளிப்புற காயங்கள் ஏதுமில்லை. அவருக்கு முதல் உதவி செய்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து அவருக்கு மூளைப்பகுதியில் எடுக்கப்பட்ட சி.டி. ஸ்கேனை பொறுத்து காது, மூக்கு, தொண்டை மருத்துவரிடம் கருத்துரை பெற்றதில் அவருக்கு வலது Maxillary Sinus உட்பகுதி சுவற்று எலும்பில் முறிவு ஏற்பட்டிருந்ததாக கருத்துவரை வழங்கியதால் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்துரை வழங்கி காயச்சான்று வழக்கினேன். (**மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி காயங்கள் மேற்சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**